# <u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் ஜுலை திங்கள் 23–ம் நாள் திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**<u>பொருள் எண்: 1</u>**

குளச்சல் நகராட்சிக்கு பகுதி II திட்டம் 2006–2007–ன் கீழ் நவீன ஆடறுக்கும் மனை கட்டிடத்திற்கு அரசாணை எண் G.O. (MS) 72 நாள் 25.05.2007 மூலம் ரூ. 10.00 லட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இதில் ரூ. 5.00 லட்சம் அரசு மான்யமாகவும் மீதமுள்ள ரூ. 5.00 லட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செய்வதற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 257 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 2</u>**

குளச்சல் நகராட்சிக்கு அரசு பகுதி II திட்டம் 2006–2007–ன் கீழ் பழைய மின்மோட்டார்களை மாற்றி புதிய மோட்டார்கள் வாங்குவதற்கு அரசாணை எண் G.O. (MS) No. 78 நாள் 05.09.2006–ல் ரூ. 1.00 லட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட்டுள்ளது. குளச்சல் பிரதான சாலையில் சுந்தர் பிரஸ் அருகில் இருந்து பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரையிலான பழைய AC பிரதான பம்பின் குழாயானது அடிக்கடி பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிப்படைவதால் அதனை மேற்கண்ட திட்டத்தின் கீழ் மாற்றுவதற்கு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு 28.09.2006–ல் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிறகு குளச்சல் நகர்மன்றம் தனது தீர்மான எண் 30 நாள் 06.12.2006 மூலம் மேற்கண்ட திட்டத்தின் கீழ் பாலத்தன்கரையில் ஒரு போர் வெல் அமைத்து அருகில் உள்ள நீர்தேக்கத் தொட்டியுடன் இணைக்கும் பணியினை ரூ. 1.40 லட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு அனுமதி அளித்ததின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி 07.12.2006–ல் பிரேரரண அனுப்பபட்டுள்ளது.

இந்நிலையில் நகர்மன்ற தலைவர் அவர்கள் நகராட்சிகளின் கண்காணிப்பு பொறியாளர், சென்னை அவர்களிடம் ஆலோசனை மேற்கொண்டதில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு பதிலாக பழுதடைந்துள்ள மின்மோட்டார்களை மாற்றி புதிய மின் மோட்டார்கள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதன் பேரில் நகர்மன்ற தீர்மான எண் 83 நாள் 29.01.2007 மூலம் அனுமதி பெறப்பட்டு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 17.02.2007 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் அரசாணையில் மோட்டார் வாங்குவதற்கு அறிவுறுத்தியுள்ளதால் அதனை வாங்க நடவடிக்கை மேற்கொண்டு பணியினை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார். அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மன்ற தீர்மான எண் 146 நாள் 30.03.2007 மூலம் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிவடைந்துள்ளது.

தற்போது புதிய அரசாணையில் எண் G.O. (MS) No. 93 நாள் 05.07.2007–ல் குளச்சல் நகராட்சிக்கு பழுதடைந்துள்ள AC பைப்பினை மாற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே பகுதி II திட்டம் 2006–2007–ன் கீழ் மோட்டார் வாங்க நடவடிக்கை எடுத்து மோட்டார் வாங்கியதை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும், குளச்சல் பிரதான சாலை சுந்தர் பிரஸ் அருகே பழுதடைந்த 150mm AC main ஐ மாற்றி 160mm PVC 6kg/m$^2$ பைப்பாக மாற்றி மேற்கண்ட அரசாணை படி பணி செய்திட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 258 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 3</u>**

குளச்சல் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் அமைத்திட தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் (TWAD) மூலம் ஆய்வு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றம் தீர்மான எண் 160 நாள் 30.03.2007 மூலம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தனது முதல் கட்ட ஆய்வு அறிக்கையினை அறித்துள்ளது. மேலும் ஆய்வு பணிகளை ரூ. 15.41 லட்சம் திருத்திய மதிப்பீடு தயார் செய்து அளித்துள்ளது. இந்நிலையில் அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் வழங்கல் துறை அவர்களின் கடித எண் 11878/MAV/2007–1 நாள் 23.04.2007–ன்படி செயல்படுத்த STP Site தேவைப்படுவதால் நகராட்சி பகுதியினை ஒட்டியுள்ள உப்பளத்தில் உள்ள சர்வே எண் 204/6–ல் உள்ள 4.05 ஹெக்டேர் (10 ஏக்கர்) நிலத்தினை அரசிடமிருந்து கோரி பெற நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்லாம்.

**தீர்மானம் எண். 259 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கும், திடக்கழிவு சேகரிப்புக்கும் சேர்த்து 10 ஏக்கர் நிலம் என்ற திருத்தத்துடன் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 4</u>**

குளச்சல் நகராட்சியின் பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் பழுதடைந்து பயனற்ற நிலையிலிருந்த கட்டண கழிப்பிடத்தை இடித்து மாற்றிவிட்டு கடைகளாக மாற்றுவதற்கு குளச்சல் நகராட்சி மன்றம் தனது தீர்மானம் எண் 184 நாள் 20.04.2007–ல் தீர்மானித்துள்ளது. மேற்படி கட்டிட பணிகள் முடிவடைவடையும் தருவாயில் உள்ளதால் அவற்றை மாதாந்திர வாடகைக்கு ஏலம் விடுவதற்கும் தொகை நிர்ணயம் செய்வதற்கும் மன்றம் முடிவெடுப்பது தொடர்பாக.

**அ.குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 260 லேலதாரரின் வைப்புத்தொகை (Deposit) ரூ.80000/– (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) ஆக தீர்மானிக்கப்பட்டது. மாதவாடகை லேலத்தின் மூலம் உறுதி செய்திடவும் தீர்மானிக்கப்பட்டது. உறுதி செய்யப்படும் லேலதாரரின் வைப்புத்தொகை நிரந்தர வைப்புத்தொகை நிரந்தர வைப்புத்தொகையாக இருக்கும் என்ற நிபந்தனையுடனும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 5</u>

குளச்சல் நகராட்சியில் டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்தினுள் 2003–2004–ம் ஆண்டின் IDSMT திட்டத்தின் கீழ் ரூ. 80.00 லட்சம் செலவில் வணிக வளாகம் கட்டப்பட்டு பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. மேற்படி வணிக வளாக கட்டிடங்களின் அறைகளை மாதாந்திர வாடகைக்கு விடுவதற்கான வைப்புத் தொகை மற்றும் ஏல நிபந்தனைகள் பற்றி மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 261 புதிய கட்டிட பணிகளுக்காக பல ஆண்டுகளாக கடை நடத்தி வந்து காலி செய்து தந்துள்ள 17 கடைகாரர்களுக்கு டிபாஸிட் தொகை ரூ. 5000 குறைவுடன் அரசு நிர்ணய தொகைக்கு கடைகள் கொடுக்கவும், மாதாந்திர வாடகைக்கு, கீழ்க் குறிப்பிட்டபடியான நிரந்தர வைப்புத் தொகையுடன் ஏனைய கடைகளை லேலம் விடுவதற்கும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

| <u>தரைதளம்</u> | <u>முதல் தளம்</u> |
|---|---|
| **8’x10’ ரூ. 20000/–** | **8’x10’ ரூ. 10000/–** |
| **8’x12’ ரூ. 25000/–** | **8’x12’ ரூ. 15000/–** |
| **10’x12’ ரூ. 30000/–** | **10’x12’ ரூ. 20000/–** |
| **12’x12’ ரூ. 40000/–** | **12’x12’ ரூ. 25000/–** |

**64 அறை கட்டிடத்தில் எண்கள் 12, 13 (துரை தளம்) 44, 45, 46 மற்றும் 47 கொண்ட அறைகளை TNEB–க்கு அரசு நிர்ணய தொகைக்கு வாடகைக்கு, வைப்புத் தொகையின்று விட தீர்மானிக்கப்பட்டது. எண்கள் 14 மற்றும் 21 கடைகளை மணவாளக்குறிச்சி கூட்டுறவு பண்டக சாலை ரேசன் கடைக்கு அரசு நிர்ணய தொகைக்கு வைப்புத் தொகையின்றி மாதாந்தர வாடகைகு விடவும், எண்கள் 47 முதல் 52 கொண்ட கடைகளை அரசு Library –க்கு கொடுத்திடவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 6</u>

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சர்வே எண் M1-9/18 ஈழக்காணி விளையில் வசிக்கும் திரு. சுகாயராஜ் அவர்கள் மனைவி திருமதி. பிளாரன்ஸ், தனிஸ்லாஸ் அவர்கள் மகன் ஜாயிசன், சகாய சீலன் மனைவி வினோராணி அந்தோணி பிள்ளை அவர்கள் மகன் ஜாண்சன்,திரு. தனிஸ்லாஸ் அவர்கள் மகன் காஸ்டன் ஆன்றோ ஆகியோர்கள் சேர்ந்து தங்களுக்கு உரிய பட்டா நிலத்தில் பாதைக்கான இடத்தினை பொதுமக்களின் தேவைக்கு பொது ரோடு போடுவதற்கு வேண்டி நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில் தானமாக எழுதி கொடுத்தள்ளார்கள். மனுதாரருக்குரிய பட்டா நிலத்தை நகராட்சியின் சொத்தாக எடுத்துக்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 262 அலுவலகக் குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 7</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சர்வே எண் M1-7/4–ல் ஈழக்காணி விளையில் வசிக்கும் திரு பனியடிமை மகன் திரு. பெல்லார்மின் திரு. மிக்கேல் அவர்கள் மகன் தார்த்தீஸ் திரு. தாசன் அவர்கள் மகன் திரு. ஆல்பிரட், திரு. மரிய நாயகம் அவர்கள் மகன் அத்தனாஸ் ஆகியோர்கள் சேர்ந்து தங்களுக்கு உரிய பட்டா நிலத்தில் உள்ள நடைபாதையை நகராட்சி பொது சாலைக்கு வேண்டி நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில் தானமாக எழுதி கொடுத்துள்ளார்கள். மனுதாரர்களுக்குரிய பட்டா நிலத்தை நகராட்சியின் சொத்தாக எடுத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 263 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 8</u>**

குளச்சல் நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலும், பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலும் கூடுதலாக நீரேற்றுவதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 118 நாள் 28.02.2007–ல் 6.50 லட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் தற்போது புதிதாக 6” பம்பிங் மெயின் அமைக்கப்பட்டு பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. மேற்படி பம்பிங் மெயினிற்கு 2006–2007 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வெள்ளிபிள்ளையார் கோயில் பக்கம் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்தும் தற்போது ஆசாரிமார் தெருவில் அமைந்துள்ள போர்வெல்லில் உள்ள 1.5 எச்.பி. மோட்டாரை மாற்றி நகராட்சியில் இருப்பிலுள்ள 10 எச்.பி. மோட்டாரை பொருத்தி மேற்படி பம்பிங்மெயினுடன் இணைக்கும் பட்சத்தில் கூடுதலாக நீரேற்ற முடியும் என்பதால் நகர்மன்ற தீர்மான எண் 232 நாள் 15.06.2007–ல் ரூ. 65,000/–க்கான மதிப்பீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன் பேரில் 03.07.2007–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு.

1. திரு. பி. தங்கமணி – 6.85 % மதிப்பீட்டைவிட அதிகம்.
2. திரு. சி. சந்திர சேகர் – 0.03 % மதிப்பீட்டைவிட குறைவு.

இதில் திரு. சி. சந்திரசேகர் என்பவர் 0.03 % மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 264 அலுவலகக் குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 9</u>**

குளச்சல் நகராட்சி குடிநீர் பிரிவிற்கு குடிநீர் நீரேற்றும் நிலையத்திற்கு தேவையான மின் மோட்டார்கள் (கம்பெனி ரகம்) 5 எண்ணம் மற்றும் 5 ஸ்டாட்டர்கள் அது தொடர்பான சப்மெர்சிபுள் கேபிள்கள் வினியோகத்திற்கு ரூ. 2,40,000/– மதிப்பீட்டிற்கு (நகர்மன்ற தீர்மானம் எண் 225, நாள் 15.06.2007–ல்) அனுமதிக்கப்பட்டதின் பேரில் 03.07.2007–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விவரம் வருமாறு

1. திரு. பி. தங்கமணி – 2.25 % மதிப்பீட்டைவிட அதிகம்.
2. திரு. சி. சந்திர சேகர் – 0.02 % மதிப்பீட்டைவிட குறைவு.

இதில் திரு. சி. சந்திரசேகர் என்பவர் 0.02 % மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 265 அலுவலகக் குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 10</u>

குளச்சல் நகராட்சி குடிநீர் பிரிவு நீரேற்றும் நிலையம் அறை எண் 1—னை இடித்து மாற்றி விட்டு மேற்படி கேபிள் லைனினை பம்பு அறை எண் 2—ல் இணைத்து புதிதாக மெயின் சுவிட்ச் அமைத்தல் மற்றும் போர்வெல் இருக்கும் இடத்தில் 2" G.I. பைப்பினை மாற்றி புதிய சேம்பர் கட்டுவதற்கு ரூ. 40,000/— மதிப்பீட்டிற்கு (நகர்மன்ற தீர்மானம் எண் 228 நாள் 15.06.2007—ல்) அனுமதிக்கப்பட்டதின் பேரில் 03.07.2007—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டனன. அதன் விவரம் வருமாறு

1. திரு. பி. தங்கமணி – 2.73 % மதிப்பீட்டைவிட அதிகம்.
2. திரு. சி. சந்திர சேகர் – 3.39 % மதிப்பீட்டைவிட குறைவு.

இதில் திரு. சி. சந்திரசேகர் என்பவர் 3.39 % மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 266 அலுவலகக் குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 11</u>

குளச்சல் நகராட்சி காமராஜர் பேருந்து நிலைய வணிக வளாகத்தில் பழைய கழிப்பிடத்தை மாற்றி புதியதாக 5 கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடைகளுக்கு மின்வசதி செய்தல் மழைநீர் செல்லுவதற்கு பி.வி.சி. குழாய் அமைத்தல் மேற்கூரையில் சிமெண்ட் தளம் மற்றும் படிக்கட்டில் தடுப்பு சுவர் அமைப்பதற்கு ரூ. 45,000/— மதிப்பீட்டிற்கு (நகர்மன்ற தீர்மானம் எண் 233 நாள் 15.06.2007—ல்) அனுமதிக்கப்பட்டதின் பேரில் 03.07.2007—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டனன. அதன் விவரம் வருமாறு

1. திரு. பி. தங்கமணி – 3.22 % மதிப்பீட்டைவிட அதிகம்.
2. திரு. சி. சிவதாணுமாலையன் – 0.25 % மதிப்பீட்டைவிட குறைவு.

இதில் திரு. சி. சிவதாணுமாலையன் என்பவர் 0.25 % மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள சி. சிவதாணுமாலையன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 267 அலுவலகக் குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 12**

இந்நகராட்சி கணணி பிரிவில் இயங்கி கொண்டிருக்கின்ற ஏ.சி. (குளிரூட்டி) –யுடன் இணைக்கப்பட்டுள்ள Stabilizer-ம் புதிதாக வாங்குவதற்கு ரூ. 2000/–க்கு (நகர்மன்ற தீர்மானம் எண் 243 நாள் 25.06.2007–ல்) அனுமதிக்கப்பட்டதின் பேரில் 09.07.2007–ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டனன. அதன் விவரம் வருமாறு

1. சப்தா கூல் கோ், நாகர்கோவில் – ரூ. 1900/–
2. ஏர்டெக், நாகர்கோவில் – ரூ. 2000/–
3. லோகன் டெக்னாலஜி, நாகர்கோவில் – ரூ. 2100/–

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் சப்தா கூல்கோ் நாகர்கோவில் நிறுவனம் ரூ. 1900/–க்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த விலைப்புள்ளியை அளித்துள்ள சப்தா கூல் கோ், நாகர்கோவில் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 268 அலுவலகக் குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 13**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனிப் பகுதியில் சுனாமி நிவாரணப் பணியின் கீழ் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு குளச்சல் காணிக்கை மாதா கோயிலின் பங்குத் தந்தை அவர்கள் (சர்வே எண் M-1-12/3-ல் 0.79.50 ஏர் (2178 ச.அ) ) மனையினை நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயருக்கு எழுதி கொடுத்துள்ளார்கள். எனவே மேற்கண்ட பட்டா இடத்தினை நகராட்சியின் சொத்தாக எடுத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 269 அலுவலகக் குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 14**

மரமடி சந்திப்பில் பாலத்தை ஒட்டியுள்ள 100mm G.I. பைப் அடிக்கடி பழுதுபட்டு வருகிறது. ஆகவே அதனை மாற்றி புதிதாக அமைக்க வேண்டியுள்ளது. மேலும் அண்ணாசிலை அருகில் உள்ள கழிப்பிடத்திற்கு செல்லும் PVC பைப்பினையும் புதிதா மாற்ற வேண்டியுள்ளது. தற்போது மேற்கண்ட இரண்டு இடங்களிலும் பைப் பழுதடைந்து குடிநீர் வீணாகி செல்வதாலும், குடிநீர் விநியோகத்தின் அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை செய்வதற்கும் அதற்கான மதிப்பீட்டு தெகையான ரூ. 17,500/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 270 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 15</u>**

குளச்சல் நகராட்சிப்பகுதியில் தினசரி குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. இதனால் கீழ்குறிப்பிட்டுள்ள இடங்களில் அமைந்துள்ள மின்மோட்டார்கள் அடிக்கடி பழுதடைந்து குடிநீர் விநியோகம் பாதிப்படைகிறது . எனவே சம்மந்தப்பட்ட பகுதிகளில் உள்ள மின் மோட்டார்களை சரி செய்வதற்கும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 44,200/—க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ.எண். | இடத்தின் பெயர் |
|---|---|
| 1. | பாலத்தன் கரை பம்ப் அறையில் இருக்கும் 12.5 HP மோட்டார் பழுதடைந்ததை சரிசெய்தல் மற்றும் புதிதாக 1 அடி GI நிப்பிள் மாற்றுதல் |
| 2. | பர்ணட்டிவிளை போர்வெல் நம்பர் 4—ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |
| 3. | வி.கே.பி. பள்ளியின் பக்கம் போர்வெல் நம்பர் 11—ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |
| 4. | கொட்டில்பாடு போர்வெல் நம்பர் 1—ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |
| 5. | வெள்ளிபிள்ளையார் கோயில் பக்கம் போர்வெல் நம்பர் 5—ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |
| 6. | கொட்டில்பாடு போர்வெல் நம்பர் 3—ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |

அ.குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 271 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 16</u>**

**<u>குளச்சல் நகராட்சி நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம் :</u>**

குளச்சல் நகராட்சியில் டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்தினுள் 2003—2004—ம் ஆண்டின் IDSMT திட்டத்தின் கீழ் ரூ. 80.00 லட்சம் செலவில் கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 64 அறைகள் கொண்ட கட்டிடத்திற்கு சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற வாழ்க்கையில் 50 ஆண்டு காலம் எட்டி பிடித்து பொன்விழா கண்டுள்ள தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சாதனையை நினைவு கூறுகின்ற வகையில் “**கலைஞர் கருணாநிதி வணிக வளாகம்**” என பெயர் சூட்டிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 272 தீர்மானத்தின் போது திருமதிகள் அல்போன்சாள், A.T. லதா, செலஸ்டினம்மாள், ஜான்சி, லூர்து மேரி, கோமளா, சீதை மற்றும் சீலா ஜெயந்தி, திருவாளர்கள் சுரேஸ், பின்டோ, பிரான்ஸிஸ் அமலதாஸ், ஜாண், இயேசுதாசன், சூசைமரியான், லியோண்ஸ், முருகன், T.A. முனாப், நூர்முகம்மது ஆகியோர் அவையில் இருந்தனர். தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து திரு. இயேசுதாசன் வெளிநடப்பு செய்தார். ஏனையவர்கள் ஆதரவு தெரிவித்து கரகோசம் எழுப்பினர். நகர்மன்றத் தலைவரையும் சேர்த்து 19 உறுப்பினர்கள் ஆதரவோடு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 17**

**குளச்சல் நகராட்சி நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம் :**

குளச்சல் நகராட்சியில் டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்தினுள் 2003–2004–ம் ஆண்டின் IDSMT திட்டத்தின் கீழ் ரூ. 80.00 லட்சம் செலவில் கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 32 அறைகள் கொண்ட கட்டிடத்திற்கு கவியரசு கண்ணதாசன் அவர்கள் தமிழ் இலக்கியத்தியற்கு அளித்துள்ள ஒப்பற்ற படைப்புகளை நினைவு கூறுகின்ற வகையில் **“கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்”** என பெயர் சூட்டிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 273 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி.

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் ஜூலை திங்கள் 31–ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டங்கள் 20.04.2007, 29.05.2007 மற்றும் 25.06.2007 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேற்படி மூன்று சாதாரணக் கூட்டங்களிலும் 10–ம் வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.A. சேசடிமை என்பவர் கலந்து கொள்ளவில்லை. எனவே தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920– 39–ம் பிரிவின் (1) –ம் உட்பிரிவின்படி பதவி வகிப்பானது அற்றுப்போதல் தொடர்பான அறிவிப்பு 20.07.2007–ல் சார்பு செய்யப்பட்டது. அதற்கு அன்னார் 28.07.2007 அன்று அளித்துள்ள பதில் கடிதத்தில் தவிர்க்க முடியாத சொந்த அலுவல் காரணமாக தன்னால் மேற்படி மூன்று கூட்டங்களிலும் பங்கேற்க இயலவில்லை எனவும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 50 உப பிரிவு 4 (1) –ன்படி தன்னை உறுப்பினர் பதவியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளவும் கேட்டுக் கொண்டுள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அ.குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 274 திரு. .A. சேசடிமை அவர்களை உறுப்பினர் (மன்ற) பொறுப்பில் மீண்டும் சேர்த்துக் கொள்ள ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்கண்ட விபரப்படி பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி. எஸ். சுதா, நகரமைப்பு ஆய்வாளர் | 5/2007 | 615/– |
| 2 | திரு. பி.ஆர். பாபு, உதவி திட்ட அமைப்பாளர் | 4/2007<br>5/2007 | 396/–<br>374/– |
| 3 | திருமதி. ஆ.நிர்மலா ஜாய், இளநிலை உதவியாளர் | 5/2007 | 62/– |
| 4 | திரு.கே.ஐயப்பன், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 5/2007 | 210/– |
| 5 | திரு.வி.நடராஜா, அலுவலக உதவியாளர் | 5/2007 | 513/– |
| 6 | திருமதி.கே. மீனாம்பாள், மகப்பேறு ஆயா | 5/2007 | 156/– |

**அ.குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 275 அலுவலகக் குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்கண்ட விபரப்படி பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி. எஸ். சுதா, நகரமைப்பு ஆய்வாளர் | 6/2007 | 526/– |
| 2 | திருமதி. பிரேமா, சமுதாய அமைப்பாளர் | 6/2007 | 49/– |
| 3 | திருமதி.கே. மீனாம்பாள், மகப்பேறு ஆயா | 6/2007 | 208/– |
| 4 | திரு.வி.நடராஜா, அலுவலக உதவியாளர் | 6/2007 | 361/– |

**அ.குறிப்பு :** அனுமதி வழங்'கலாம்.

**தீர்மானம் எண். 276 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சியில் சுனாமி பிரிவில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்க்கண்டவாறு பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.ச. ரவி, உதவி செயற் பொறியாளர் | 5/2007<br>6/2007 | 4362/–<br>4212/– |
| 2 | திருமதி. வி.எஸ்.சுப்பு லெஷ்மி, இளநிலை பொறியாளர் | 6/2007 | 2885/– |
| 3 | திருமதி..டி.எஸ்.ஷோபா, பணி ஆய்வர் | 5/2007<br>6/2007 | 62/–<br>132/– |
| 4 | திருமதி. எம். சாந்தி, சமுதாய அமைப்பாளர் | 6/2007 | 141/– |

**அ.குறிப்பு :** சுனாமி நிதியில் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 277 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

இந்நகராட்சி மேலாளர் திரு. ஜெகநாதன் அவர்கள் பணி மாற்றம் காரணமாக விருதுநகர் நகராட்சியிலிருந்து மாறுதலாகி வந்த வகைக்குரிய மாறுதல் பயணப்படி ரூ. 1141/– வழங்க அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 278 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சிப் பகுதியில் ஜுன் 10–ம் தேதி (கொட்டில்பாடு, குளச்சல் பீச்) சிக்குன் குன்யா விழிப்புணர்வு முகாம் நடத்திய வகையில் பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலமாக வாகனப் பிரச்சாரம் மேற்கொண்ட வகையிலும், நோட்டீஸ் அச்சடித்து வினியோகித்த வகையிலும், முகாம் தொடர்பான செலவுகள் மேற்கொண்ட வகையிலும் ரூ. 7900/– சம்மந்தப்பட்டவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : சொர்ண ஜெயந்தி திட்டம் சமுதாய அமைப்பு நிதியில் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 279 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படி ரூ. 330/– லிருந்து ரூ. 600/– ஆக உயர்த்தி அரசாணை (அரசாணை (இருபதாண்டு) எண். 104 நாள் 26.06.2007) வெளியிடப்பட்டுள்ளது என்கின்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 280 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 8**

2006-2007-ம் ஆண்டிற்கு 12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் சிமெண்ட் தளம் அமைத்து குப்பைகளை பிரித்து மண்புழு உரம் தயாரிக்க ஷெட் அமைத்து (Vermi Compost) தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை தினகரன் பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் (08.06.2007) சம்மந்தப்பட்ட விளம்பர நிறுவனத்திற்கு ரூ. 1440/– வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 281 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

சுனாமி 2004 – கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமங்கள் – கடல் அலை உயர்மட்ட அளவிலிருந்து 200 மீட்டருக்குட்பட்ட உறுதியற்ற நிலையிலுள்ள வீடுகள் மற்றும் கடல் அலை உயர்மட்ட அலை அளவிலிருந்து 1000 மீட்டருக்குட்பட்ட அரசு திட்டங்களால் கட்டப்பட்ட பழைய வீடுகளுக்கு மாற்றாக புதிய வீடுகள் கட்டுவது – பயனாளிகள் பட்டியல் உறுதி செய்வது (இணைப்பில் கண்டபடி) தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். எச்1/75922/06 நாள் 03.07.2007–ல் நகர்மன்றத்தின் அங்கீகாரம் வேண்டி விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு

<u>பயனாளிகளின் பட்டியல்</u>

| | |
|---|---|
| 1 | செல்வி, க/பெ .சேசைய்யா, 15/27, துறைமுகத்தெரு, குளச்சல்.. |
| 2 | சாந்தலூஸ், த/பெ. செபஸ்தியான், 16/129, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 3 | சேசைய்யா, த/பெ. பவுலோஸ், 13/111–I துறைமுகத்தெரு–II |

| | |
|---|---|
| 4 | கிளையோன்ஸ், த/பெ. பவுலோஸ், 13/111, துறைமுகத்தெரு–II |
| 5 | ராஜேஸ்வரி, க/பெ. ஜார்ஜ், 11/95, துறைமுகத்தெரு–II |
| 6 | மேரி சைலஸ், க/பெ. ஜோசபாத், 12/66, துறைமுகத்தெரு–II |
| 7 | கன்னிகை தாசன், த/பெ.வறீது, 15/55, துறைமுகத்தெரு–II |
| 8 | சிலுவைதாசன், த/பெ. மாணிக்கம், 19/25B, துறைமுகத்தெரு–II |
| 9 | அந்தோணிப்பிச்சை, த/பெ .தொபியாஸ், 12/6, துறைமுகத்தெரு |
| 10 | பெஞ்சமின், 12/17–எண். 3, குளச்சல். |
| 11 | பாஸ்கோ, த/பெ. தனிஸ்லாஸ், 12/21, எண். .3, குளச்சல். |
| 12 | ஜாண்தாசன், த/பெ. பிரான்சிஸ், 12/22A, எண். 3, குளச்சல் |
| 13 | ஜாண்றோஸ், த/பெ. சீமோன், 12/29, எண். 3, குளச்சல் |
| 14 | தெரசம்மை, க/பெ. அலெக்ஸாண்டர், 12/34, எண். 3, குளச்சல். |
| 15 | அந்தோணிப்பிள்ளை, த/பெ. வஸ்தியான், 13/22, துறைமுகத்தெரு |
| 16 | ஜெரோம், , த/பெ. சிலுவைப்பிள்ளை, 13/28, துறைமுகத்தெரு–2. |
| 17 | எஸ். புனிதா மேரி, க/பெ. பெலிக்ஸ் ராஜன், 15/25, எண். 1 துறைமுகத்தெரு–2. |
| 18 | மரியம்மாள், த/பெ.சாம்மிக்கேல், 15/54, துறைமுகத்தெரு–3. |
| 19 | எஸ். பனி மேரி, த/பெ. ஜோரிஸ் பிள்ளை, 15/56, துறைமுகத்தெரு–2 |
| 20 | எ. ஜார்ஜ், 19/2, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 21 | ஹேமலிற்றா, 19/3, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 22 | எஸ்.ததேயுஸ், 19/2A, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 23 | அருள்ராஜ், த/பெ. அந்தோணி பிச்சை, 19/14A., எண்.2. துறைமுகத்தெரு, குளச்சல். |
| 24 | எ. அந்தோணிபிச்சை, த/பெ.கிரகோரி, 19/14, எண்.2. துறைமுகத்தெரு, குளச்சல். |
| 25 | பனிதாசன், த/பெ. பனோ அடிமை, 19/24–1, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 26 | எ. கார்லூஸ், த/பெ.அந்தோணிபிச்சை, 19/24B, எண்.2, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 27 | ற்றி. லெஸ்லின்கமலா, க/பெ. அமல்ராஜ், 15/166–2, இலந்தவிளை. |
| 28 | புஷ்பம், த/பெ. மனுவேல் பிள்ளை, 11/45, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 29 | தாசன், த/பெ. மைக்கேல், 18/35, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 30 | லேன் அடிமை, 19/122, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 31 | அந்தோணியம்மாள், 18/43, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 32 | டென்னீஸ், த/பெ. அருளப்பன், 11/84, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 33 | பேதுருபிள்ளை, த/பெ. சூசை, 14/25, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 34 | பென்னட், த/பெ. சீமோன், 17/29, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 35 | அல்போன்ஸ், த/பெ. அருளப்பன், 18/39, துறைமுகத்தெரு, குளச்சல். |
| 36 | எ. அல்போன்ஸ், த/பெ. அல்லேசி, 7/35.சி. கொட்டில்பாடு, குளச்சல். |
| 37 | ஜோசப்பினாள், க/பெ. மரியதாசன், 7/36G., கொட்டில்பாடு, குளச்சல். |
| 38 | ஜோசப்பினாள், 7/38C கொட்டில்பாடு. |
| 39 | பர்வதம்மாள், க/பெ. மரிய நாயகம் (லேட்) 7/51, கொட்டில்பாடு. |
| 40 | சகாய அடிமை, 5/36–3 கொட்டில்பாடு. |

<u>அ.குறிப்பு</u> மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 282 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

குளச்சல் நகராட்சியில் உள்ள குடிநீர் இணைப்புகளில் ஏற்படும் அடைப்பு மற்றும் பழுதுகளை சரி செய்வதற்கு 2007–08–ம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறையின் விலை விபரப் பட்டியலின்படி குடிநீர் இணைப்பு பராமரிப்பிற்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**1/2'' குடிநீர் இணைப்பு :**

| | | |
|---|---|---|
| மண் சாலை | : | ரூ. 150.00 |
| சிமெண்ட் தளம் | : | ரூ. 150 + 420 = ரூ. 570.00 |
| தார்தளம் | : | ரூ. 150 + 275 = ரூ. 425.00 |
| மெட்டல் தளம் | : | ரூ. 150 + 80 = ரூ. 230.00 |

**¾'' குடிநீர் இணைப்பு**

| | | |
|---|---|---|
| மண் சாலை | : | ரூ. 250.00 |
| சிமெண்ட் தளம் | : | ரூ. 250 + 420 = ரூ. 670.00 |
| தார்தளம் | : | ரூ. 250 + 275 = ரூ. 525.00 |
| மெட்டல் தளம் | : | ரூ. 250 + 80 = ரூ. 330.00 |

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 283 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

குளச்சல் நகராட்சியில் தற்போது புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து 2007–08–ம் ஆண்டிற்கான பைப்புகளின் விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதில் கீழ்கண்ட பொருட்களுக்கு அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

| வ.எண். | பொருட்களின் விபரம் | யூனிட் | 15 mm விட்டம் | 20 mm விட்டம் |
|---|---|---|---|---|
| 1 | ஜி.ஜ, பைப் | 1 மீ. | 64.00 | 81.00 |
| 2 | ஜி.ஜ, கப்பிளிங் | 1 எண்ணம் | 9.50 | 12.65 |
| 3 | ஜி.ஜ, எல்போ | 1 " | 10.50 | 16.00 |
| 4 | ஜி.ஜ, பெண்ட் | 1 " | 19.00 | 29.00 |
| 5 | ஜி.ஜ, டீ (Tee) | 1 " | 15.00 | 24.00 |
| 6 | ஜி எம். மெயின் காக் | 1 " | 160.00 | 185.00 |
| 7 | வாட்டர் மீட்டர் | 1 " | 485.00 | 715.00 |
| 8 | ஜி.ஜ, ரெடியூசர் ¾" x ½" | 1 " | 14.00 | 14.00 |
| 9 | புளோ கண்ட்ரோல் வால்வு | 1 " | 125.00 | 150.00 |
| 10 | ஜி.ஜ, சர்பேஸ் பாக்ஸ் | 1 " | 200.00 | 200.00 |
| 11 | ஜி.ஜ. சாடில் | 1 " | 82.25 | 82.25 |
| 12 | மேசன்டிறி சேம்பர் | 1 " | 650.00 | 650.00 |
| 13 | ஜி.எம், வீல் வால்வு | 1 " | 190.00 | 230.00 |
| 14 | எம்.எஸ். கிளம்பு | 1 " | 5.00 | 6.00 |
| 15 | ஜி.எம். செக் வால்வு | 1 " | 79.00 | 88.00 |
| 16 | ஜி.ஜ,செக் நெட் | 1 " | 16.00 | 16.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | ஜி.ஐ, பெரூல் | 1 “ | 138.00 | 195.00 |
| 18 | ஜி.ஐ, நிப்பிள் | 1 “ | 29.00 | 29.00 |
| 19 | ஜி.ஐ, யூனியன் | 1 “ | 38.00 | 38.00 |
| 20 | ஜி.ஐ, பைப் பதித்தல் | 1 “ | 10.00 | 10.00 |
| 21 | ஜி.ஐ, பைப் மரை போடுதல் | 1 எண்ணம் | 3.30 | 3.30 |
| 22 | பெரூல் சாடில் யூனியன் பொருத்துதல் | 1 “ | 10.00 | 10.00 |
| 23 | மீட்டர் பொருத்துதல் | 1 “ | 40.00 | 40.00 |
| 24 | மண் தோண்டுதல் | 1 மீ | 20.00 | 20.00 |
| 25 | பகிர்மான குழாயில் துளையிட்டு இணைப்பு வழங்குதல் | 1 எண்ணம் | 250.00 | 250.00 |
| 26 | மேற்பார்வை கட்டணம் | மொத்த தொகையில் 15 சதவீதம் | | |
| 27 | குறைந்த பட்ச தொகை | ரூ. 750.00 | | |
| **குழாய் பதிக்க தோண்டப்படும் இடத்தை சீரமைக்க ஆகும் தொகை** | | | | |
| 1) | சிமெண்ட் தளம் | : ரூ. 430.00 / 1 ச.மீ. | | |
| 2) | தார்தளம் | : ரூ. 275.00 / 1 ச.மீ. | | |
| 3) | மெட்டல் தளம் | : ரூ. 80.00 / 1 ச.மீ. | | |

: மேற்கண்ட விலை விகிதத்தில் இனிமேல் வழங்கப்பட உள்ள குடிநீர் இணைப்பிற்கான மதிப்பீட்டை தயார் செய்வதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 284 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 12**

குளச்சல் நகராட்சிக்கு 2006–2007–ம் ஆண்டின் பகுதி –II திட்டத்தின்கீழ் (Part-II Scheme) நவீன ஆடறுக்கும் மனை கட்டுவதற்கு அரசாணை எண். G.O.(M.S) No. 72 நாள் 25.05.2007 –ன்படி ரூ.10.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 5.00 இலட்சம் அரசு மான்யமாகவும், மீதமுள்ள ரூ. 5.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 257 நாள் 23.07.2007–ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியை சார்ந்த திருமதி. R.நசீமா பீவி என்பவர் மேற்கு கடற்கரைச் சாலையின் வடபுற ஓரத்தில் சிங்காரவேலன் காலனிக்கு எதிர்வசம் தனக்கு சொந்தமான சர்வே எண். C2-9/3D–ல் 13.250 சென்ட் நிலம் இருப்பதாகவும் அதனை சென்டிற்கு ரூ. 42,000/– விலை விகிதத்தில் தருவதற்கும் சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்கள். அரசு மதிப்பின்படி சதுர அடி ரூ. 35/– (சென்ட்க்கு ரூ. 15,260/–) என்றும் உயர்மதிப்பில் ஆவணம் சதுர அடி ரூ. 53/–ம் (சென்ட்க்கு ரூ. 23,108/–) என்றுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அ.குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 285 உரிய அனுமதி பெறுவதற்கு மாவட்ட ஆட்சியருக்கும், நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் பிரேரணை அனுப்புவதற்கு ஏகமனதாக அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 13**

குளச்சல் நகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கம் தினமும் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருவதால் குடிநீர் நீரேற்றும் பிரதான குழாய்கள், குடிநீர் விநியோகம் செய்யும் குழாய்கள், வால்வுகள் ஆகியவைகளில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகின்றன. இதனால் குடிநீர் வினியோகம் தொடர்ந்து தடைபடாமல் இருக்க அவசரக்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 242 நாள் 25.06.2007–ல் மேற்படி பணிகளை உடனடியாக செய்வதற்கு ரூ. 61,000/– மதிப்பீட்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்டதன் பேரில் 17.07.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1) திரு.P. தங்கமணி : 7.12% மதிப்பீட்டை விட அதிகம். ( ரூ. 62,261/–)

2) திரு.C. சந்திரசேகர் : 0.13% மதிப்பீட்டை விட குறைவு. ( ரூ. 58,045.75 )

இதில் திரு.C. சந்திரசேகர் என்பவர் 0.13% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 286 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 14**

குளச்சல் நகராட்சி கதவு எண். 29/86B எண் கொண்ட கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு நிரந்தரமாக துண்டிப்பு செய்யப்பட்டு (மன்ற தீர்மானம் 818 நாள் 28.07.2004–ன்படி) குடிநீர் இணைப்பு ரத்து செய்யப்பட்டது. மனுதாரர் வைப்புத் தொகை ரூ.3,000/–ம் நாள் 20.11.1998–ல் செலுத்தியுள்ளார். தற்போது மனுதாரர் மேற்படி வைப்புத் தொகையை பயன்படுத்தி மீண்டும் மேற்கண்ட குடிநீர் இணைப்பை கேட்டுள்ளார். ந.க.எண்.1765/04/அ3 கோப்பின்படி துண்டிப்பு செய்யப்பட்ட குடிநீர் இணைப்பின் வைப்புத் தொகையை புதியதாக கோரப்பட்டுள்ள குடிநீர் இணைப்பிற்கு ஈடு செய்து கதவு எண். 29/86B –ல் மீண்டும் இணைப்பு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 287 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 15**

குளச்சல் நகராட்சி பகுதிகளுக்கு 11 ஆழ்துறை கிணறுகளில் இருந்து நீர்மூழ்கி மோட்டர் மூலம் நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதற்காக மின் மோட்டார்கள் தினமும் சுமார் 22 மணி நேரம் இயக்கப்படுகிறது. இதனால் மின்மோட்டார்கள் அடிக்கடி பழுதடைந்து வருகிறது. அதிலும் கீழ்கண்ட 6 ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீர் மூழ்கி மோட்டார்கள் அதிகமாக அடிக்கடி பழுதடைந்து வருகிறது.

(1) வெள்ளிப்பிள்ளையார் கோயில் கீழ்புறமுள்ள பீச் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பம்பிங் செய்யும் ஆழ்துளை கிணறு எண். 1.

(2) சீம்பிளிவிளை அருகில் உள்ள சுனாமி காலனிக்கு பம்பிங் செய்யும் ஆழ்துளை கிணறு எண். 3

(3) வெள்ளிப்பிள்ளையார் கோயில் மேல்புறம் உள்ள வி.கே.பி.மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பம்பிங் செய்யும் ஆழ்துளை கிணறு எண். 4

(4) வெள்ளிப்பிள்ளையார் கோயில் மேல்புறம் பீச் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பம்பிங் செய்யும் ஆழ்துளை கிணறு எண். 5

(5) வி.கே.பி. பள்ளிக்கூடம் அருகில் உள்ள ஆழ்துளை கிணறு எண். 10 மற்றும் 11.

மோட்டார்கள் அடிக்கடி பழுதாவதை ஆராய்ந்ததில் ஆழ்துளை கிணற்றினுள் மண் சகதி அதிகமாக உள்ளது. ஆழ்துளை கிணறுகளை சுற்றி ஆழமான பள்ளம் காணப்படுகிறது. இதன் வழியாக மழைநீர் சேற்றுடன் ஆழ்துளை கிணறுகளில் செல்வதால் மோட்டார்களில் மண் ஏறி அடிக்கடி பழுதடைந்து வருகிறது. அதனை தடுப்பதற்கு ஆழ்துளை கிணறுகளை Flushing செய்து பள்ளத்தில் சரளை கற்களை இட்டு நிரப்பி ஆழ்குழாய் கிணற்றையும் நிலத்தில் இயங்கும் மின் மோட்டாரையும் பாதுகாத்திட பிளாட்பாரம் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 85,000/–க்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 288 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

100% மானியத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக கிராமப்புற சுய உதவிக்குழுக்கள் மூலம் மட்டுமே ஆவின் பாலகம் நடத்தப்பட வேண்டுமென அரசு நிபந்தனை விதித்துள்ளது. எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 905/திட்டம்/2007 நாள் 06.07.2007–ல் குளச்சல் நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பேருந்து நிலைய கட்டிடத்தில் ஆவின் பாலகம் ஒன்று அமைத்திட ஏதுவாக 12' x 10' அளவில் அறை ஒதுக்கி தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக மன்றம் முடிவு செய்யலாம்.

**அ.குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 289 தினசரி சந்தை வளாகத்தினுள் வசதியான காலி இடத்தில் அல்லது நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தினுள் அல்லது அண்ணாசிலை சந்திப்பு பகுதியில் (நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் அல்லது இடத்தில்) இடவசதி செய்து கொடுத்திட (ஆவின் பாலகம் அமைக்கப்படுவதற்கு) ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 17**

தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும், வெறி நாய்க்கடி (Rabies) நோயினை தடுக்கும் விதமாகவும், வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு தடுப்பூசி போடும் வகையிலும் நாய்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின்படி உரிமம் வழங்கப்பட வேண்டுமென நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6189/2006/ஜே2 நாள் 23.07.2007–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 290 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 18**

**குளச்சல் நகராட்சி மன்றத்தின் 7–ம் வார்டு நகர்மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்**

மரமடி பகுதியில் மீனவர்கள் ஓய்வு எடுப்பதற்கும், தொழில் தொடர்பான கருவிகள் வைப்பதற்கும் ஒரு சமுதாயக்கூடம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 291 ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

<u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் ஜுலை திங்கள் 31–ம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

<u>பொருள் எண்: 1</u>

குளச்சல் நகராட்சியில் காந்தி ஜங்சன் – மேற்கு கடற்கரை இணைப்பு சாலை அருகே பனைவெல்ல கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான சுமார் 5.50 ஏக்கர் இடம் எந்த பயன்பாட்டிலும் இல்லாமல் பாழடைந்து பயனற்ற நிலையில் உள்ளது.

நகரின் கூடுதல் வளர்ச்சியை கருத்தில் கொண்டும், நகரின் உட்பட்ட பகுதியில் மீன்பிடி துறைமுகம் கட்டப்பட உள்ளதாலும், நகராட்சிக்கு கூடுதல் வருவாயை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு பயன்பட கூடியதாக வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம் போன்றவை மேற்கண்ட இடத்தில் கட்டிட ஏதுவாக பனைவெல்ல கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான இடத்தை நகராட்சிக்கு வாங்கிடவும், உரிய மேல் நடவடிக்கை தொடரவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறுது.

அ.குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 292 குளச்சல் நகரின் எதிர்கால வளர்சிக்கு உதவுகின்ற வகையில் வணிக வளாக கட்டுமானங்கள் அமைப்பதற்கான போதிய இடவசதி இந்நகரத்தில் குறிப்பிடத்தக்க எதுவும் இல்லை. எனவே 2004 சுனாமி பேரழிவிற்கு பின்னர், முற்றிலும் இடிந்து பாழடைந்த நிலையில், சிக்குன்குனியா போன்ற நோய்களை உருவாக்கும் கொசு உற்பத்தி கேந்திரமாக இருந்து கொண்டு மிகப் பெரிய சுகாதார கேட்டை உருவாக்கிக் கொண்டிருக்கும் பொருளில் கண்டுள்ள மேற்படி குளச்சல் பனை வெல்லக் கூட்டுறவு அமைப்பிற்குச் சொந்தமான 5.5 ஏக்கர் பரப்பளவு நிலத்தினை குளச்சல் நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்திடவோ அல்லது 50 ஆண்டுகளுக்கு மேலான நீண்ட கால குத்தகைக்கு குளச்சல் நகராட்சிக்கு தந்திடவோ தமிழக அரசினைக் கேட்டுக்கொள்வதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 2</u>

குளச்சல் நகராட்சிக்கு மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண் 4402/2007/ ஆ1 நாள் 20.07.2007 மூலம் ரூ. 2.96 இலட்சம் மாநில நிதி ஆணையம் மூலம் தார்சாலை அல்லது சிமெண்ட் தளம் அமைப்பதற்கு மான்யம் அளித்துள்ளது. அதன்படி நகர்மன்ற தலைவருடன் தளம் ஆய்வு மேற்கொண்டு கீழ்கண்ட இரண்டு பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறுது.

| | |
|---|---|
| 1. 24–வது வார்டு காமராசர் சாலை குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு. | – ரூ. 1,80,000 |
| 2. 1–வது வார்டில் உள்ள கல்லத்தி விளையில் மண் சாலையை சிமெண்ட் சாலையாக அமைக்கும் பணிக்கு | – ரூ. 1,20,000 |
| | ரூ. 3,00,000 |

இதில் மான்யத் தொகை போக மீதி தொகையான ரூ. 4,000/—த்தினை பொது நிதியிலிருந்து செய்வதற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 293 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 3</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜ் பேருந்து நிலையம் எதிர்புறம் தற்போது செயல்பாட்டில் இல்லாத பொதுக் குழாயினை (Public tap) மாற்றி கல்லத்திவிளைப் பகுதியில் 1/90எ. வீட்டு பக்கம் புதிதாக பொதுக் குழாய் அமைக்கவும், பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகை எதிர்புறம் தற்போது செயல்பாட்டில் இல்லாத பொதுக்குழாயினை மாற்றி குளச்சல் பீச் 13—ம் வார்டில் கதவு எண். 19/24 வீட்டு முன்பக்கம் புதிதாக பொதுக்குழாய் அமைப்பதற்கும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 294 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி